மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கடைகளில் குடிப்பதற்கு சில்லரையில் விற்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. எங்காவது அப்படித் தவருன முறையில் கடையிலேயே குடிக்க அனுமதிப்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, லைசன்ஸை ரத்து செய்ய முடியும்.

பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்தில் அபிவிருத்தி வரி

* 70 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கு, சுருட்டப்பள்ளிக் கால்வாயின் நீர் பாயாத இடங்களுக்கும், தனித்தீர்வை Betterment Levy போட்டிருப்பது குறித்து மனு ஏதும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அபிவிருத்தி வரி Levy of Betterment Contribution விதிப்பது குறித்து இப்பகுதியிலுள்ள கிராமத்திலிருந்து மனு ஏதும் அண்மையில் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Seats in House of the People

* 61 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have represented to the Centre that the number of seats in the Lok Sabha should continue to be on the basis of the 1951 census?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1951 மக்கட் தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகு மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசு இவ்வரசின் கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும் கூடிய சீக்கிரத்தில் அமைக்கப்படவிருக்கும் தொகுதி எல்லை வரையறுக்கும் குழுவிடம், மறுபடியும் மேற்கண்ட கருத்துக்களை விண்ணப்பிக்க தமிழக அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரிக்கவும் போவதில்லை, குறைக்கவும் போவதில்லை என்று அறிக்கை வந்தது. 1971 ஜனத்தொகை அடிப்படையில் வாக்காளர்களின்